**இரண்டாம் நிலை காவலர், இரண்டாம் நிலை சிறை காவலர் மற்றும் தீயணைப்பாளர் பதவிகளுக்கான பொதுத்தேர்வு**

**எழுத்து தேர்வுக்கான பாடத்திட்டம்**

இரண்டாம் நிலை காவலர், இரண்டாம் நிலை சிறை காவலர் மற்றும் தீயணைப்பாளர் ஆட்சேர்ப்புக்கான எழுத்து தேர்வு இரண்டு நிலைகளைக் கொண்டது.

**பகுதி – I**
**தமிழ் மொழி தகுதி தேர்வு :**

தமிழ் மொழி தகுதி தேர்வில் தகுதி பெறுவது கட்டாயமாகும். தமிழ் மொழி தகுதி தேர்வில் குறைந்தபட்சம் 32 மதிப்பெண்கள் (40%) பெற்ற விண்ணப்பதாரர்களுடைய முதன்மை எழுத்து தேர்வின் OMR விடைத்தாள்கள் மட்டுமே மதிப்பீடு செய்யப்படும். இவ்வெழுத்து தேர்வுக்கான நேரம் 80 நிமிடங்கள் (1 மணி 20 நிமிடங்கள்) மற்றும் கொள்குறி வகை வினாத்தாளாக 80 வினாக்கள் கொண்டதாக இருக்கும், ஒவ்வொரு வினாவிற்கும் தலா 1 மதிப்பெண் வழங்கப்படும். மொத்த மதிப்பெண்கள்: 80.

**தமிழ் மொழி தகுதி தேர்வுக்கான பாட திட்டம் :**

பத்தாம் வகுப்பு வரை கற்பிக்கப்படும் தமிழ் பாடங்களிலிருந்து, வினாக்கள் கேட்கப்படும். தமிழ் இலக்கணம், தமிழ் இலக்கியம், மொழித்திறன், பிழை திருத்தம், ஆங்கில சொல்லுக்கு நேரான தமிழ் சொல்லை அறிதல், தமிழ் அறிஞர்கள் மற்றும் தமிழ்த்தொண்டு தொடர்பான வினாக்கள் கேட்கப்படும்.

**பகுதி – II**

**முதன்மை எழுத்து தேர்வு :**

முதன்மை எழுத்து தேர்வு 70 மதிப்பெண்கள் கொண்டதாக இருக்கும், இதில் ஒவ்வொரு வினாவிற்கும் தலா 1 மதிப்பெண் கொண்ட 70 கொள்குறி வகை வினாக்கள் இருக்கும். இவ்வெழுத்து தேர்வுக்கான நேரம் 80 நிமிடங்கள் (1 மணி, 20 நிமிடங்கள்) ஆகும். விண்ணப்பதாரர்கள் முதன்மை எழுத்து தேர்வில் தகுதி பெற, குறைந்தபட்சம் 25 மதிப்பெண்கள் (35%) பெற்றிருக்க வேண்டும். முதன்மை எழுத்து தேர்வு கீழ்கண்ட பகுதிகளை கொண்டது.

**பகுதி (அ) – பொது அறிவு (45 வினாக்கள் – 45 மதிப்பெண்கள்)**
**பகுதி (ஆ) – உளவியல் (25 வினாக்கள் – 25 மதிப்பெண்கள்)**

**பகுதி – அ**

**பொது அறிவு :**

பத்தாம் வகுப்பு வரை கற்பிக்கப்படும் பாடங்களிலிருந்து வினாக்கள் கேட்கப்படும்.

**பொது அறிவியல் :**

- இயற்பியல்,
- வேதியியல்,
- உயிரியல்,
- சூழ்நிலையியல்,
- உணவு & ஊட்டச்சத்தியல்.

**சமூக அறிவியல் :**

- வரலாறு,
- புவியியல்,
- இந்திய அரசியல் ,
- பொருளாதாரம்.

**பொது அறிவு மற்றும் நடப்பு நிகழ்வுகள் :**

அறிவியல் மற்றும் தொழில் நுட்பத்தின் சமீபகால வளர்ச்சி, இந்தியாவில் அரசியல் வளர்ச்சி, இந்தியா மற்றும் தமிழ்நாட்டின் கலை & கலாச்சாரம், விளையாட்டுகள் & தடகள விளையாட்டுகள், தேசிய & சர்வதேச விருதுகள், தேசிய & பன்னாட்டு அமைப்புகள். பெயர் சுருக்கங்கள், யார்– யார், புத்தகங்கள் & ஆசிரியர்கள், இந்தியா & அதன் அண்டை நாடுகள், இன்றைய கால இந்தியா மற்றும் உலக நடப்பு நிகழ்வுகள்.

**பகுதி – ஆ**

**உளவியல் (Psychology)**

**1. தொடர்பு / தொடர்புகொள் திறன் (Communication Skills):**

தமிழ் மொழியை சிறப்பாக கையாளும் திறன் பற்றி சோதிக்கப்படும்.

**2. எண் பகுப்பாய்வு (Numerical Analysis):**

எண்ணியல் திறன் தொடர்பாக விரைவான பதில் அளித்தல் பற்றி சோதிக்கப்படும்.

**3. தருக்க பகுப்பாய்வு (Logical Analysis):**

கொடுக்கப்பட்ட கேள்வியில் உள்ள தகவலின் பல்வேறு பரிமாணங்களை கண்டறிந்து தருக்கரீதியாக பகுப்பாய்வு செய்தல்.

**4. அறிவாற்றல் திறன் (Mental Ability):**

இந்த சோதனையானது, தூண்டல் அல்லது விலக்கு பகுத்தறிவு மூலம் முடிவுகள் எப்படி எடுக்கப்படுகிறது என்ற விண்ணப்பதாரர்களின் திறன் சோதிக்கப்படும்.

**5. தகவல்களை கையாளும் திறன் (Information Handling Skills):**

கொடுக்கப்பட்ட தகவலுக்கு, அந்த தகவலின் பல்வேறு அம்சங்கள், அனுமானங்கள் மற்றும் இணைக்கப்பட்ட உண்மைகள் பற்றி சோதிக்கப்படும்.